**கவனிக்க.-** இந்த அதிவிசேட வர்த்தமானியின் சிங்கள, ஆங்கிலப் பிரதிகள் தனித்தனியாக பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1909/20 - 2015 අප්‍රේල් මස 06 වැනි සඳුදා - 2015.04.06

*1909/20 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) (அ) உப உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2015, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய 1905/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டு, 2015, சனவரி மாதம் 18 ஆந் திகதிய 1897/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் அட்டவணையானது, 2015, மார்ச்சு மாதம் 22 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2015, ஏப்பிறல் 05.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர் இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் (இல. 3) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 25 மற்றும் 26 ஆவது விடயங்களுக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன் மூலம் :-

25. புனித பூமி திட்டமிடலும் அபிவிருத்தி செய்தலும் ;
26. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் ;
27. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை.



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) அவ்வறிவித்தலில் மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் (இல. 4) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு :-

(அ) அதன் தலைப்பு "(4) மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சர்" எனவும் ;

(ஆ) அதன் நிரல் I, II மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருமாறு விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :-

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல், மற்றும் ஒழுக்க பண்பாடான, விழுமியம் பூண்ட ஒரு சமூகத்தை கட்டி யெழுப்புவது தொடர்பிலான விடயங்களும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் தொடர்பிலான விடயங்கள் சார்ந்த கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல்
2. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல்
3. வாகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு
4. குடிவரவு, குடியகல்வு அலுவல்கள்
5. இலங்கை பிரசாவுரிமை மற்றும் பிறநாட்டுக் குற்றவாளிகளை ஒப்படைத்தல் தொடர்பான நடவடிக்கைகள்
6. ஆட்களைப் பதிவு செய்தல்
7. அபாயகர ஔடதங்களின் பாவனையின் தடுப்பும் கட்டுப்பாடும்
8. கிறித்தவ மத அலுவல்கள் தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்படுத்துகையும் கண்காணிப்பும்
9. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்
10. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

1. பொலிஸ் திணைக்களம்
2. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்
3. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
4. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை
5. கிறித்தவ மத அலுவல்கள் திணைக்களம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- பொலிசுக் கட்டளைச் சட்டம்
- (1948ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) குடிவருவோர், குடியகல்வோர் சட்டம்
- (1948ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) பிரசாவுரிமைச் சட்டம்
- இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்குதல் சட்டம்
- நாடற்ற ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்குதல் சட்டம் (1986 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க)
- (1988ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க) நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1977ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க) புறத்தொப்படைத்தல் சட்டம்
- (1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) ஆட்களைப் பதிவு செய்தல் சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கு எதிரான சமவாயங்கள் சட்டம்
- (2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) போதையூட்டும் பொருட்களில் தங்கி வாழும் ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) பற்றிய சட்டம்
- தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம் (1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க )
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும்.

(3) அவ்வறிவித்தலில் உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சர் (இல. 5) என்ற தலைப்பு தொடர்பில்,பின்வருமாறு :-

(அ) அதன் தலைப்பு "(5)உள்நாட்டலுவல்கள் அமைச்சர்" எனவும் ;

(ஆ) அதன் நிரல் I, II மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :-

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. உள்நாட்டலுவல்கள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச் சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல் | 1. சகல மாவட்டச் செயலகங்களும் | • (1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) தத்துவங்களைக்கைமாற்றுதல்(பிரதேசச் செயலாளர்கள்) சட்டம் |
| 2. வேறேதேனும் அமைச்சுக்களுக்கு குறிப்பாகக் கொண்டுவரப்படாத விடயங்கள் தொடர்பில் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களை வழிநடாத்தலும் பொதுவான கண்காணிப்பும் | 2. சகல பிரதேச செயலகங்களும் | • பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம் |
| 3. அரச விழாக்கள் | 3. பதிவாளர் நாயகம் திணைக்களம் | • மலைநாட்டு விவாக, மண நீக்கற் சட்டம் |
| 4. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் | | • முஸ்லிம் விவாக, மண நீக்கற் சட்டம் |
| 5. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | • நொத்தாரிசுகள் கட்டளைச் சட்டம் |
| | | • ஆவணங்களை பதிவுக் கட்டளைச் சட்டம் |
| | | • இலங்கை சாதாரண விவாகப் பதிவு கட்டளைச் சட்டம் |
| | | • (1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) விடுமுறைகள் சட்டம் |
| | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக் கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும். |

(4) அவ்வறிவித்தலில் நகர அபிவிருத்தி நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் (இல. 12) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு :-

(இ) அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 3 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம் ;

(5) அவ்வறிவித்தலில் நீர்ப்பாசன மற்றும் கமத்தொழில் அமைச்சர் (இல. 15) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு:-

(அ) அதன் தலைப்பு " (15) கமத்தொழில் அமைச்சர் "எனவும் ;

(ஆ) அதன் நிரல் I, II, மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :-

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. கமத்தொழில் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் கீழ்வரும் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்த மைத்தல்
2. கமத்தொழில் பயிர்கள் பல்வகைப் படுத்துகை
3. கமத்தொழில் உற்பத்திகளின் மேம் படுத்துகை
4. கமத்தொழில் கல்வி
5. உயர் தொழிநுட்ப கமத்தொழில் அபி விருத்தி
6. இலங்கை கமத்தொழில் சேவையின் நிர்வாகமும் ஆளணி முகாமையும்
7. ஐக்கிய நாடுகளின் உணவு, கமத் தொழில் அமைப்பாண் மையுடன் தொடர்புபட்ட பணிகள்
8. மரக்கறி அபிவிருத்திச் சபை, பழங்கள் அபிவிருத்திச் சபை என்பவற்றின் சொத்துக்கள் மற்றும் ஏனைய வளங் களுக்குரிய அலுவல்கள்
9. வயல்களின் ஆட்சி உரித்து
10. விவசாயிகளின் சமூகப் பாதுகாப்பு நலன்கள் திட்டம்
11. ஏற்றுமதி கமத்தொழில் பயிர் அபிவிருத்தி
12. சரக்கு வகைகள் மற்றும் அதனோடி ணைந்த உற்பத்திகளைச் சந்தைப் படுத்தும் சபையின் சொத்துக்கள் மற்றும் ஏனைய வளங்களைப் பாது காத்தலும் அது தொடர்பான அலுவல் களும்
13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட் டுள்ள ஏனைய சகல விடயங்களும்
14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்ளைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும்*
*நியதிச்சட்ட நிறுவனங்களும்*
*அரச கூட்டுத்தாபனங்களும்*

1. கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபை
2. வரையறுக்கப்பட்ட இலங்கை பொசு பேற்று கம்பனி
3. கமத்தொழில் திணைக்களம்
4. தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத் துகையும், குடியேற்ற அதிகார சபையும் (ஹதபிம)
5. இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை
6. பயறு வகை, தானிய ஆராய்ச்சி, உற்பத்தி அதிகார சபை.
7. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
8. இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான இலங்கை மன்றம்
9. பின் அறுவடைத் தொழில்நுட்பவியல் நிறுவகம்
10. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி
11. கொழும்பு கொமர்ஷல் பசளைக் கம்பனி
12. தேசிய உரச் செயலகம்
13. வரையறுக்கப்பட்ட ஜனதா பர்டிலய்ஸர் என்டபிறய்சஸ்
14. கமநல அபிவிருத்தித் திணைக்களம்
15. ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட*
*வேண்டிய சட்டங்கள்*

- (1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டம்
- (1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) பீடைக் கொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம்
- (1951 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) மரங்களை வெட்டிச் சாய்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம்
- தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபைச் சட்டம்
- (1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) தாவர பாதுகாப்புச் சட்டம்
- (2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) விதைநெல் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) மண்வளம் பேணல் சட்டம்
- (1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்கான பேரவைச் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க) பசளைகள் ஒழுங்குபடுத்தற் சட்டம்
- கமநல அபிவிருத்திச் சட்டம் (2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க)
- ஏற்றுமதி கமத்தொழில் அபிவிருத்திச் சட்டம் (1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க)
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக் கப்பட்ட வையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும்

(6) அவ்வறிவித்தலில் நெடுஞ்சாலைகள், உயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் (இல. 16) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு :-

(அ) அதன் தலைப்பு "(16) நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்" எனவும் ;

(ஆ) அதன் நிரல் I, II, மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருமாறு விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :-

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தா பனங்களின் கீழ் வரும் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல் | 1. வீதி அபிவிருத்தி அதிகார சபையும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும் | • (2008ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க) தேசிய பொது வழிகள் சட்டம் |
| 2. உயர் நிலையைக் கொண்ட தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் ஏனைய பிரதான வீதிகளைக் கொண்ட வீதி வலையமைப்பொன்றை வழங்குதலும் சிறந்த முறையில் பேணுதலும் | 2. வீதி பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் | • (1981ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க) வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் |
| 3. மக நெகும நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல் | 3. இலங்கை முதலீட்டுச் சபை | • (1978ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு சட்டம். |
| 4. தேசிய கொள்கைக்கு அமைவாக வீதிப் பயன்பாட்டுக் கட்டணங்களைத் திரட்டுதலும், பின்னாய்வு செய்தலும், ஒருங்கிணைந்த அபிவிருத்திக்காக நெடுஞ்சாலைகள் கருத்திட்டங்கள் முழுவதையும் செயற்படுத்தும் பொருட்டு தெளிவான கூட்டிணைப்புச் செயற்பாட்டை முடிவுறுத்தலும் | 4. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மூலதனக் கம்பனிகள் | • (2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) திறமுறைகள் அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டம் |
| 5. மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான பாதைகள் தொடர்பிலான தேசிய கொள்கையின் பாற்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களின் ஒருங்கிணைப்பும் நெறிப்படுத்தலும் | 5. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அதிகார சபை | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக் கப்பட்ட வையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |
| 6. வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவித்தல் | | |
| 7. தனியார் துறையின் முதலீடுகளை ஊக்குவித்தல் | | |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |

8. 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பொதுத் திறைசேரியின் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்ட பின்வரும் குறைவாகப் பயன்படுத்துப்படுகின்ற சொத்துக்களுக்குப் புத்துயிரளித்தல் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் ஆற்றப்படும் செயற்பாடுகளை நெறிப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும் :-

i. பதுளையில் அமைந்துள்ள சொத் துக்கள் - கலம்பு கொமர்சல் கம்பனி
ii. சினோரெக்ஸ் (லங்கா) லிமிட்டட்
iii. ஜெக் லங்கா லிமிட்டெட்
iv. பிளய்மத் இன்டஸ்றீஸ் (பிறைவேட் லிமிட்டெட்)
v. கொஸ்மொஸ் மெகீ இன்டஸ்றீஸ்
vi. காபுல் லேஸ் (பிறைவேட் லிமிட்டட்)
vii. இன்ரடிரேட் லங்கா பிறைவட் லிமிட்டெட்
viii. சீத்தா பெசன்ஸ் பிறைவேட் லிமிட்டெட்
ix. சி . டி. அபரல் பிறைவேட் லிமிட்டெட்
x. நீடல் கிராப் (பிறைவேட்) லிமிட்டெட்
xi. ஹாய் பெசன் காமண்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
xii. கொலின்ஸ் காமன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
xiii. றுகுணு புத்தா அபரல் (பிறைவேட்) லிமிட்டெட்
xiv. சஞ்ஜய காமன்ட் (பிறை வேட்) லிமிட்டெட்
xv. மெக்பா அபரல் (பிறை வேட்) லிமிட்டெட்
xvi. யொஹீதா அசோசியேட்டஸ் (பிறை வேட்) லிமிட்டெட்
xvii. டயனமிக் குளோதின் (பிறைவேட்) லிமிட்டெட்

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| xviii. 609 பொலிமர்ஸ் எக்ஸ்கோட் (பிறைவேட்) லிமிட்டெட் | | |
| xix. கொஸ்கோ பொலிமர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் | | |
| xx. கிரேட் வோல் திறெட் மெனு பக்கசரின் (பிறைவேட்) லிமிட்டெட் | | |
| xxi. ஆதம்ஜீ எக்ஸ்றட்ஸன் (பிறை வேட்) லிமிட்டெட் | | |
| xxii. டாட்டா பூட் (பிறைவேட்) லிமிட்டெட் | | |
| xxiii. றென்டன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் | | |
| xxiv. றிகான் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் | | |
| xxv. கொம்பொயிட் ரவர் சொலியூசன் (பிறைவேட்) லிமிட்டெட் | | |
| xxvi. ஹெல்த் பூட் புரடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | | |
| xxvii. சிறி சிராக் (பிறைவேட்) லிமிட்டெட் | | |
| xxviii. றோயல் எக்ஸ்போட்ஸ் (பிறை வேட்) லிமிட்டெட் | | |
| xxix. கொன்டிநென்டல் வனஸ்பதி (பிறை வேட்) லிமிட்டெட் | | |
| 9. சிறுமட்டத்திலானதும் நடுத்தர மானது மான தொழில் முயற்சிகளுக்கான ஊக்குவிப்பும் நிதியளிப்பும் அனுசரணையும் | | |
| 10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் | | |
| 11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல். | | |

(7) அவ்வறிவித்தலில் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் (இல. 18) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 5 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம் ;

(ஆ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 5 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம் ;

(8) அவ்வறிவித்தலில் நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் (இல. 19) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு:-

(அ) அதன் தலைப்பு "(19) நீதி அமைச்சர்" எனவும் ;

(ஆ) அதன் நிரல் I, II மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :-

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. நீதி நிர்வாகத்தை நிர்வகிக்கும் பொறி முறை பற்றிய விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக் களங்கள்,நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் கீழ்வரும் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள் கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத் திட்டங்களையும் வகுத்தமைத்தல்
2. அரசியலமைப்பின் மூலம் வேறெவரி டத்தும் சாட்டப்பெறாத நீதி நிருவாகம் தொடர்பிலான நீதிமன்ற நிருவாக அலுவல்கள்.
3. நீதிமன்றங்களின் நிருவாகம்
4. அரசாங்கத்தின் சார்பாக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்தலும் சிவில் சட்ட நடவடிக்கைகள்
5. அரசுக்கும் அரச திணைக்களங்களுக் கும் சட்ட மதியுரை வழங்குதல்
6. சட்ட வரைவு தயாரித்தல்
7. யாதேனுமொரு தவறாளி மீது விதிக்கப் பட்ட தண்டனை தொடர்பில் மன்னிப் பளித்தல், குறித்த தண்டனையைக் குறைத்தல், தணித்தல், தாமதித்தல், இடைநிறுத்தல் ஆகியன தொடர்பில் ஆலோசனை வழங்கல்
8. தொழில் நியாயசபைகள் தொடர்பான அலுவல்கள்
9. சட்ட மீள்கூற்றும் கோவைப்படுத்தலும்
10. சட்ட மறுசீரமைப்பு
11. சட்டச் சொற்றொகுதிகளின் தயாரிப்பும் வெளியீடும்
12. நீதி நிர்வாகத்தில் நிர்வகிப்பதில் தாமதத்தை தவிர்ப்பதற்காக, நீதி முறைமையின் ஆலோசனைகளின் பேரில் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக் குதலும் செயற்படுத்துதலும்

*நிரல் II*

*திணைக்களங்களும்*
*நியதிச்சட்டநிறுவனங்களும்*
*அரச கூட்டுத்தாபனங்களும்*

1. சட்டமா அதிபர் திணைக்களம்
2. சட்ட வரைஞர் திணைக்களம்
3. சிறைச்சாலைகள் திணைக்களம்
4. சனசமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம்
5. இளந்தவறாளிகளுக்கான பயிற்சிப் பாடசாலைகள்
6. கடன் நிவாரண சபைத் திணைக்களம்
7. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்
8. உயர்நீதிமன்ற பதிவாளர் அலுவலகம்
9. இலங்கை சட்ட ஆணைக்குழு
10. உயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபை
11. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு
12. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
13. பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்
14. சட்டக் கல்விச் சபை

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட*
*வேண்டிய சட்டங்கள்*

- (1987ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க) உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைச் சபைச் சட்டம்
- (2001ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க) சர்வதேச சிறுவர் கடத்தலின் குடியியல் துறைகளுக்குரிய சமவாயச் சட்டம்
- சட்டக் கல்விப் பேரவைச் சட்டம்
- கடன் இணக்கச் சபைக் கட்டளைச் சட்டம்
- வெளிநாட்டுத் தீர்ப்புகளை வலுப் படுத்தல் கட்டளைச் சட்டம்
- (1988ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க) அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் (பொருட்களை கையுதிர்த்தல்) சட்டம்
- (1990ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) மாகாணங்களின் மேல் நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1978ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) கூட்டுத்தாபன வழக்குரைநர் நிறுவகச் சட்டம்
- (1978ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) நீதித்துறை ஏற்பாட்டுச் சட்டம்
- நீதிமன்ற மொழிச் சட்டம்
- (1969ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) சட்ட ஆணைக்குழுச் சட்டம்
- (1978ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) சட்ட உதவிச் சட்டம்
- (1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க) மத்தியஸ்த சபைகள் சட்டம்
- குற்றச்செயல்கள் தடுப்புச் சட்டம்
- மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டம்

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 13. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு தொடர்பிலான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும் | | • சமூக இயலாமை தடுப்புச் சட்டம் |
| 14. சிறைச்சாலைகள் நிர்வாகமும் மறுசீரமைப்பும் | | • (1979ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க) ஆரம்ப நீதிமன்ற ஏற்பாட்டுச் சட்டம் |
| 15. குற்றச்செயல்கள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள விடயங்கள் | | • முடிக்குரிய (தீங்கியலில் பொறுப்பு) சட்டம் |
| 16. சனசமூக அடிப்படையிலான சீர்திருத் தக் கருத்திட்டங்கள் | | • சிறைச்சாலைகள் சட்டம் |
| 17. பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் பணிகள் | | • இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாட சாலைகள்) சட்டம் |
| 18. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட் டுள்ள ஏனைய சகல விடயங்களும் | | • பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்ட ளைச் சட்டம் (1922 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) |
| 19. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக் கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

(9) அவ்வறிவித்தலில் வெகுசன ஊடக, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் (இல. 20) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு :-

(அ) அதன் தலைப்பு "(20) வெகுசன ஊடக அமைச்சர்" எனவும் ;

(ஆ) அதன் நிரல் I, II, மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருமாறு விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :-

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. வெகுசன ஊடகங்கள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப் பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் கீழ்வரும் | 1. தகவல் திணைக்களம்<br>2. அரசாங்க அச்சுத் திணைக்களம்<br>3. இலங்கை பத்திரிகைப் பேரவை | • அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் (1973ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க) (விசேட ஏற்பாடுகள்) சட்டம் |

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல்

2. செய்தி, கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல் உட்பட வெகுசன ஊடகங்களுக்கு உத்தியோகபூர்வ செய்திகளை வழங்குதல்

3. தனிப்பட்ட ரீதியிலான விசாரணைகளுக்கு செவிமடுப்பது உட்பட நிலையான ஒழுங்குமுறையாக இலங்கை பற்றிய அடிப்படைத் தகவல்களை வழங்குதல்

4. அரசாங்கத் திணைக்களங்களுக்கு தகவல் வழங்குதலும் பிரசார நடவடிக்கைகளும்

5. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதராண்மைக் குழுக்களுக்கு அவசியமான தகவல்களையும் விளம்பரப் பொருட்களையும் வழங்குதல்

6. வெளியீடுகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகள்

7. திணைக்கள வெளியீடுகள் தவிர்ந்த அரசாங்க வெளியீடுகளின் விற்பனை, களஞ்சியப்படுத்தல் மற்றும் அனுப்புகை

8. செய்தி, திரைப்படங்களையும் ஆவணத் திரைப்படங்களையும் தயாரித்தலும் காட்சிக்குவிடலும்

9. வர்த்தக தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பும் வெளிநாட்டு ஒலிபரப்புகள் உட்பட வானொலி பிரசாரப் பணிகளும்.

10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்

11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

4. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

5. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

6. சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு

7. அரச அச்சகக் கூட்டுத்தாபனம்

8. வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனி

9. வரையறுக்கப்பட்ட லங்கா பத்திரிகை நிறுவனம்

10. செலசினே தொலைக்காட்சி நிறுவகம்

11. கிரியேடிவ் ஹெலன்கா லிமிட்டட்

12. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

13. இலங்கை தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவகம்

14. மஹிந்த ராஜபக்ஸ தேசிய ரெலி-சினிமா பூங்கா (ரன்மிஹிதென்ன)

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் (1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க)
- செய்தித்தாள்கள் கட்டளைச் சட்டம்
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1996 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க)
- இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம் (1973ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க)
- இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம் (1982ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க)
- அரச திரைப்பட கூட்டுத்தாபனச் சட்டம் 1971ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க)
- அரச அச்சக கூட்டுத்தாபனச் சட்டம் (1968ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க)
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும்

(10) அவ்வறிவித்தலில் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர் (இல. 22) என்ற தலைப்பு தொடர்பில், பின்வருமாறு :-

(அ) அதன் தலைப்பு "(22) துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறைகள் அமைச்சர்" எனவும் ;

(ஆ) அதன் நிரல் I, II, மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :-

### நிரல் I

*கடமைகளும் பணிகளும்*

1. துறைமுகங்கள், மற்றும் கப்பற்றுறைகள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் கீழ் வரும் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல்
2. கப்பற்படையாட்சித்துறைக்குச் சொந்த மானவை தவிர்ந்த ஏனைய துறைகள் துறைமுகங்களினதும் வெளிச்சவீடுகள் கலங்கரை விளக்கங்களினதும் எண்ணெய் தாங்கி அமைவுகளினதும் உபகரணங்களினதும் அபிவிருத்தியும் நிருவாகமும்
3. கப்பற்சேவை வழங்குநர்கள், பாவனையாளர்கள் ஆகியோருக்கிடையிலான பிணக்குத் தீர்த்தல்
4. கப்பற்சேவைகளுக்கான போட்டி விதிகளைத் விதித்தல்
5. கப்பற்சேவை வழங்குநர்கள், பாவனையாளர்கள் ஆகியோருக்கிடையிலான ஆலோசனைகளுக்கு உதவுதலும் உறுதிசெய்தலும்
6. கப்பற்சேதங்களின் பெறுகையும் சமுத்திரப் பொருள் மீட்புகளும்
7. கப்பற்றுறை அபிவிருத்தி நிதியத்தின் நிருவாகம்
8. கப்பற் கட்டணங்களும் கப்பற்சேவை அலுவல்களும்
9. கரையோரம் சார்ந்த பயணிகள் போக்குவரத்து
10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்
11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

### நிரல் II

*திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

1. இலங்கை துறைமுக அதிகாரசபையும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும்
2. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும்
3. வாணிப கப்பற்றுறைச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம்

### நிரல் III

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- இலங்கை கப்பற்றொழிற் கூட்டுத் தாபனச் சட்டம் (1971ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க)
- துறைமேடை துப்புரவாக்குதல் மற்றும் ஆக்கவுரிமைச் சிட்டைக் கட்டளைச் சட்டம்
- (1972ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க) கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டம்
- கப்பல் உதவியாளர்கள் கட்டளைச் சட்டம்
- (1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க) வணிகக் கப்பற்றொழிற் சட்டம்
- (1979 ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க) இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக் கப்பட்ட வையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும்

*(11) அவ்வறிவித்தலில் முஸ்லிம் சமய விவகாரங்கள் மற்றும் அஞ்சல் அமைச்சர் (இல. 31) என்ற தலைப்பின் நிரல் I, II மற்றும் III இற்குப் பின்வரும் புதிய தலைப்புக்களைச் சேர்ப்பதன் மூலம்:-*

**32. அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்**

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான விடயங்களும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் தொடர் பிலான விடயங்கள் சார்ந்த கொள்கை களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத் திட்டங்களையும் வகுத்தமைத்தல் | 1. அனர்த்த முகாமைத்துவ தேசிய சபை | • (2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) இலங்கை அனர்த் முகாமைச் சட்டம் |
| 2. இயற்கைஅனர்த்தங்களும் மனிதச் செயற்பாடுகளும் காரணமாக ஏற்படும் பேரிடர்களின்போது நிவாரணமளிக் கும் செயற்பாட்டை ஒருங்கிணைத்தலும் முகாமைசெய்தலும் | 2. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |
| 3. அனர்த்தங்களைத் தடுப்பதற்கான பிரசாரமும் மீட்பு தொடர்பிலான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங் களையும் கருத்திட்டங்களையும் வகுத்த மைத்தலும் | 3. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் | |
| 4. தேசிய கொள்கையின் அடிப்படை யிலான தேசிய அனர்த்த நிவாரண முகாமைத்துவத் திட்டமிடலும் தேசிய அவசரகால நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்தலும் | 4. வளிமண்டலவியல் திணைக்களம் | |
| 5. அனர்த்தங்களைத் தணித்தல், மீட்பு குறித்த வெளிநாட்டு உதவிக் கருத்திட் டங்களை ஆரம்பித்தலும் அவற்றின் ஒருங்கிணைப்பும் | 5. தேசிய கட்டிட ஆராய்ச்சிகள் முகவ ராண்மை | |
| 6. மேற்போந்த செயற்பணிகள் உரிய காலத்தில் செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு அமைச்சுக்கள், அரசாங்க நிறுவனங் கள், முகவராண்மைகள், தனியார் நிறுவனங்கள், உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்பாண்மை களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றல் | | |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 7. இயற்கை அனர்த்தங்களும் மனிதனால் விளைவிக்கப்படும் அனர்த்தங்களும் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களின் ஒருங்கிணைப்பு | | |
| 8. வெள்ளப்பெருக்கு, வரட்சி, தொற்று நோய்கள், வேறு விசேட காரணிகளால் ஏற்படும் அனர்த்தங்களின் போது நிவாரண சேவைகளை வழங்குதல் | | |
| 9. இயற்கை அனர்த்தங்கள், மனிதனால் விளைவிக்கப்படும் அனர்த்தங்களின் போது மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் | | |
| 10. முன்எச்சரிக்கை முறைமைகள் | | |
| 11. வளிமண்டலவியல் அளவைகளும் ஆராய்ச்சிகளும் | | |
| 12. வீடமைப்பு மற்றும் கட்டிட நிர்மானத் துறையின் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | | |
| 13. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் | | |
| 14. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை | | |

**33. கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல் | 1. கடற்றொழில், நீரக வளமூலங்கள் திணைக்களம்<br>2. தேசிய நீர்வளமூலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை<br>3. இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் | • (1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்<br>• (1990 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) மீனவர் ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்பு நலம்பேணல் செயற்திட்டச் சட்டம் |
| 2. கடல்நீர், உவர்நீர், நன்நீர் மீன்பிடித் தொழிலின் அபிவிருத்தியும் முகாமையும் | 4. வரையறுக்கப்பட்ட சீ- நோர் மன்றம் | • (1998 ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க) இலங்கை தேசிய நீர்வளமூலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் |

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

3. அரசுடைமையான மீன்பிடி வள்ளங்களின் முகாமையும் அல்லது இயக்குகை

4. புறநீங்கலான பொருளாதார வலயத்தில் கடற்றொழில்சார் அபிவிருத்தியும் முகாமையும்

5. மீன்பிடித் துறைமுகங்கள், நங்கூரத் தளங்களின் நிறுவுகை, பராமரிப்பு, முகாமை

6. கடற்றொழிலுக்கு அவசியமான ஐஸ் பொறித் தொகுதிகள், குளிர் அறைகள் என்பவற்றையும் மீன்பிடித் தொழிலுக்கு அவசியமான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளையும் நிறுவுதலும் செயற்படுத்தலும்

7. உயிருள்ள, உயிரற்ற நீரக வளமூலங்களின் அபிவிருத்தி

8. மீன், மீன் உற்பத்திகளின் விநியோகமும் சந்தைப்படுத்தலும்

9. கடற்றொழில் உபகரணங்கள், கடற்றொழில் கருவிகள் என்பவற்றின் உற்பத்தி, இறக்குமதி, விநியோகம்

10. கடல் வேளாண்மை உள்ளிட்ட நீரக வளமூலங்களின் அபிவிருத்தியும் முகாமையும்

11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்

12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

5. இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

6. தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவராண்மை

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மைச் சட்டம்

- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும்

**34. நீர்ப்பாசன அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. நீர்ப்பாசனம் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் கீழ் வரும் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல் | 1. நீர்ப்பாசனத் திணைக்களம் | • நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டம் |
| 2. நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 2. நீர்வளங்கள் சபை | • நீர்வளங்கள் சபைச் சட்டம் (1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) |
| 3. உவர்நீர் நீங்கலான திட்டங்கள் | 3. ஆற்றோர மூங்கில் செய்கை கருத்திட்டம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |
| 4. மழைநீர் பேணல் | | |
| 5. நீர் மாசடைவதை கட்டுப்படுத்தலும் நீரின் தரத்தைப் பாதுகாத்தலும் | | |
| 6. வெள்ளப்பெருக்கைத் தடுத்தல் | | |
| 7. ஆறுகள், அறுவிகள், நீரோட்டங்கள் என்பவை மாசடைவதைத் தடுத்தல் | | |
| 8. நீர்ப்பாசன, வடிகாலமைப்பு, வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டுத் திட்டங்களின் ஊக்குவிப்பு, கட்டுமானம், நெறிப்படுத்துகை மற்றும் பராமரிப்பு | | |
| 9. பொறியியல் மதியுரைச் சேவைகளும் நிர்மாணிப்புகளும் | | |
| 10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் | | |
| 11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**35. உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் கீழ் வரும் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல் | 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | |

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

2. பல்கலைக்கழகக் கல்வி

3. உயர்கல்வி பெறுவதற்கான வழிகளை விரிவுபடுத்தல்

4. உரிய கல்விப் பாடத்திட்டத்தினுள் பிக்குமார்களின் உயர்கல்வி

5. தேசிய டிப்ளோமாவும் உயர் தேசிய டிப்ளோமாவும் வழங்கல்

6. இலங்கையில் உயர்கல்வி, தொழிற் கல்வியின் பண்புத்தரத்தை முன்னேற்றும் நோக்குடன் சர்வதேச கல்வி நிறுவனங்களை ஏனைய அமைப் பாண்மைகளுடன் இணைதல் அல்லது ஒத்துழைத்து மேம்படுத்துதல்

7. இலங்கை உயர்கல்வி நிறுவனங் களினால் வழங்கப்படும் பட்டங்கள், டிப்ளோமாக்களின் அங்கீகாரத்திற் கான சர்வதேசமட்ட பேச்சுவார்த்தை களில் ஈடுபடல்

8. பௌத்த, பாளி கல்வியை மேம்படுத்தல்

9. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிகள்

10. சமூக பொருளாதார ஆராய்ச்சிகள்

11. ஆராய்ச்சிகளுக்கும் ஆராய்ச்சி நிறுவ கங்களுக்கும் வசதிகளை அளிப் பதன் ஊடாக ஆராய்ச்சிகளைத் திட்டமிடுத லும் மேற்கொள்ளுதலும்

12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட் டுள்ள ஏனைய சகல விடயங்களும்

13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கீழுள்ள சகல பல்கலைக் கழகங்களும்

3. பல்கலைக்கழக ஆணைக்குழுவின் கீழுள்ள சகல பட்டப்பின்படிப்பு நிறுவனங்களும் ஏனைய நிறுவனங் களும்

4. புத்த சிராவக்க பிக்குகள் பல்கலைக் கழகம்

5. பௌத்த, பாளி பல்கலைக்கழகம்

6. இலங்கை உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்

7. இலங்கை தகவல் தொழினுட்பவியல் நிறுவகமும் (SLITT) மற்றும் அத னோடிணைக்கப்பட்ட சகல தகவல் தொழினுட்பவியல் நிலையங்களும்

8. ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒவ் நெனோடெக்னொலோஜி பிரைவேட் லிமிட்டெட்

9. தேசிய ஆராய்ச்சி சபை

10. அடிப்படைக் கற்கைகள் தேசிய நிறுவகம்

11. தேசிய விஞ்ஞான மன்றம்

12. தேசிய விஞ்ஞான, தொழினுட்ப வியல் ஆணைக்குழு

13. கோள்மண்டலக் காட்சிக்கூடம்

14. நவீன தொழினுட்பவியலுக்கான ஆதர் சி. கிளார்க் நிலையம்

15. கைத்தொழிற் தொழினுட்பவியல் நிறுவகம்

16. தேசிய வியாபார முகாமைத்துவ தேசிய நிறுவகம்

17. வாழ்க்கைத்தொழில் தொழிநுட்ப பல்கலைக்கழகம்

18. தேசிய கடற்றொழில் மற்றும் கப்பற்றுறை பொறியியல் நிறுவனம் (கடல்சார் பல்கலைக்கழகம்)

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) பல்கலைக்கழகச் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க) புத்த சிராவக்க பிக்கு பல்கலைக் கழகச் சட்டம்
- (1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க) இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகச் சட்டம்
- (1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) இலங்கை உயர் தொழினுட்பக் கல்வி நிறுவகச் சட்டம்
- இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகச் சட்டம் (1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்கம்)
- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வியல் அபிவிருத்திச் சட்டம் (1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கம்)
- (1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) தேசிய தொழில் முகாமைத்துவ நிறுவகச் சட்டம்
- இலங்கை சமுத்திர பல்கலைக்கழகச் சட்டம் (2014 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க)
- (2008 ஆம் ஆண்டின் 31 ஆம்இலக்க) தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக் கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும்

**36. தொழில் அமைச்சர்**

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. தொழில் உறவுகள் பற்றிய விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் கீழ்வரும்விடயங்களுடனும்தொடர்புட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல்
2. தொழில் உறவுகள், சர்வதேச தொழிலாளர் நியமங்கள் மற்றும் ஊழியர்களின் நலன்புரிசம்பந்தமாக கொள்கைகளைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும்
3. சர்வதேச தொழிலாளர் அமைப்பாண்மை,சர்வதேச சமூகப்பாது காப்பு அமைப்பாண்மை ஆகியவற் றுடன் ஒத்துழைப்பை பேணுதல்
4. ஊழியர் சேமலாப நிதியம், தனியார் சேமலாப நிதியம், தனியார் ஓய்வுறுத்தல் திட்டம் ஆகியவற்றின் நிருவாகம்
5. தொழில் உறவுகளும் கைத்தொழில் பிணக்குத் தீர்த்தலும்
6. தொழில்நுட்ப நீதிமன்றங்கள் தொடர்பான அலுவல்கள்
7. தொழிற்சங்கங்களைப் பதிவுசெய்தல்
8. தொழிற்சாலைகளின் பணியாளர்களின் சம்பளங்கள், சேவை நியதிகள் மற்றும் நிபந்தனைகள், தொழில் நிலைமைகள், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும்நலனோம்புகை பற்றிய கொள்கைகளை வகுத்தல்
9. தொழிலின்மை நலன் காப்புறுதித் திட்டம்
10. தொழில்வாய்ப்பு நிறுவனங் களினால் கட்டணங்கள் அறவிடப்படுவதை ஒழுங்குறுத்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

1. தொழில் திணைக்களம்
2. தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்
3. ஊழியர் சேமலாப நிதியம்
4. தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு அபிவிருத்திக்கான தேசிய நிறுவகம்
5. தொழிலாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்
6. சிரம வாசனா நிதியம்
7. மனிதவலு, தொழில்துறைத் திணைக்களம்
8. வரையறுக்கப்பட்ட இலங்கை வேலை வாய்ப்பு கூடம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- ஊழியர் பேரவைகள் சட்டம் (1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க)
- ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் (1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க)
- (1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) பெண்களையும் இளம் ஆட்களையும் சிறுவர்களையும் வேலைக்கமர்த்துதல் சட்டம்
- தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் (1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க)
- கைத்தொழிற் பிணக்குச் சட்டம் (1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க)
- பிரசவ நலன்கள் கட்டளைச் சட்டம் (1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க)
- (2009ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய நிறுவகச் சட்டம்
- பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம் (1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க)
- சாப்புகள் மற்றும் அலுவலக ஊழியர் (தொழிலையும் வேதனத்தையும்) விதிமுறைப்படுத்தல் சட்டம் (1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க)
- (1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) சிரம வாசனா நிதியச் சட்டம்
- தொழிலாளிகளின் தொழிலை முடிவுறுத்துதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க)
- தொழிற்சங்கங்கள் கட்டளைச் சட்டம் (1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க)

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| *11.* தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல் | | • (1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க) சம்பள நிர்ணய சபைகள் கட்டளைச் சட்டம் |
| *12.* தேசிய மனிதவலு மற்றும் தொழில் வாய்ப்பு கொள்கைகளைச் செயற்படுத்துதல் | | • தொழிலாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம் (1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) |
| *13.* II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் | | • கட்டணங்கள் அறவிடும் வேலை வாய்ப்பு முகவராண்மைகள் சட்டம் (1956 ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க) |
| *14.* II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

**37. பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| *1.* பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பிலான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல் | | |
| *2.* பாராளுமன்றத்திற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களது அலுவல்களுக்கும் உரியதாக அரசாங்கத்தினால் ஆற்றப்படவேண்டிய பணிகள் | | |
| *3.* பாராளுமன்ற உறுப்பினர்களின் பணியாட்டொகுதியினர் தொடர்பான தாபன அலுவல்கள் | | |
| *4.* முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் நலனோம்புகைச்சார் அலுவல்கள் | | |

**38. விமானச் சேவைகள் அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. விமானச் சேவைகள் தொடர்பிலான விடயங்களும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் தொடர் பிலான விடயங்கள் சார்ந்த கொள்கை களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல்<br>2. சிவில் விமானச் சேவைகள்<br>3. வான் போக்குவரத்து<br>4. விமானங்கள் விபத்துப் புலனாய்வு<br>5. வானூர்திகளின் பதிவு<br>6. சிவில் விமானக் கேள்வு ஒழுங்குறுத்துகை<br>7. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்<br>8. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | 1. சிவில் விமானச் சேவைகள் அதிகார சபை<br>2. வரையறுக்கப்பட்ட கப்பற்றுறை விமானச் சேவைகள் தகவல், ஆராய்ச்சி (தனியார்) கம்பனி<br>3. வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமானச் சேவைகள் (ஸ்ரீலங்கா) கம்பனி<br>4. வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் கம்பனியும் அதன் துணைக் கம்பனிகளும்<br>5. வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி | • சிவில் விமானச் சேவைகள் சட்டம் (2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க)<br>• (1982 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க) வான் செலவு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• இலங்கை சிவில் விமானச் சேவைகள் அதிகாரச் சட்டம் (2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க)<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

**39. திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சித் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப் பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத் தாபனங்களின் கீழ்வரும் விடயங் களுடனும் தொடர்புபட்ட கொள்கை களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல் | 1. தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்<br>2. மூன்றாம் நிலைக் கல்வி, வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழு<br>3. இலங்கை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை<br>4. தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் | • இலங்கை தேசிய தொழிநுட்பக் கல்வி நிறுவகச் சட்டம். (1988 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க)<br>• (1984 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை அச்சக நிறுவகச் சட்டம்<br>• (1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டம் |

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

2. தொழில் மற்றும் தொழில்வாய்ப்பு வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்

3. பயிலுநர் பயிற்சி

4. தொழில்நுட்பக் கல்வி

5. தேசிய டிப்புளோமா, உயர் தேசிய டிப்புளோமா மற்றும் பட்டச் சான்றிதழ் மட்டத்திலான சான்றிதழ்களை அளித்தல்

6. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்

7. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங் களைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

5. தேசிய தொழிற்பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை

6. இலங்கை அச்சக நிறுவகம்

7. வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியம்

8. இலங்கை- ஜேர்மனி தொழிநுட்பப் பயிற்சி நிறுவகம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1995 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரச் சபைச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும்

4-700

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.